1987 ஏப்ரல் 3]

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது போன்று, என்னுடைய தொகுதியில் உள்ள மூலனூர் ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற மூலனூரில் இருக்கிற பி.எச். சென்ட்ரை அப்கிரேட் பண்ண வேண்டும் என்று கேட்டோம். அவர்கள் சொல்கின்றபடி நாங்கள் ஏற்கனவே பணம் எல்லாம் கட்டி, தயாராக இருக்கிறோம். எனவே அரசு இதை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 140 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் இவைகள் எல்லாம பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் தொகுதியில் பாப்பாரப்பட்டி வட்டாரத்திலே உள்ள பூதநத்தம் என்ற கிராமத்திலே, 1981–82-லே அரசாங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு, 5 ஏக்கர் நிலமும், 10 ஆயிரம் ரூபாயும், டெபாசிட்டாக அந்தப் பகுதி பொதுமக்களால் செலுத்தப்பட்டு இருக்கிறது. இப்படி அரசு நிபந்தனைக்கு உட்பட்டு, 1982-லேயே பணம் எல்லாம் கொடுக்கப்பட்டது. அந்த இலாக்கா அதிகாரிகள் கூட இதற்காக சிபாரிசு செய்து, அரசின் அனுமதிக்காக அனுப்பியிருக்கிறார்கள், பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட அந்த சென்ட்டரை இடங்களில் அமைக்க அரசு அனுமதி வழங்க உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்

(முற்பகல் 10.40)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல 140 ஆரம்ப சுகாதார நிலையங்களை இந்த ஆண்டு துவக்க இருக்கிறோம். அதிலே இவைகள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எங்கெங்கு பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ, இடம் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ, அவைகள் எல்லாம் கருத்தில் கொள்ளப்படும்.

பாப்பாரப்பட்டி மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றுதல்.

272—(*வினா எண். 9637) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாரப்பட்டியில் இருக்கும் மருத்துவமனை வேறு வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டு விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?

1987 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாரப்பட்டி பேரூராட்சியாக இருக்கிறது. அங்கே அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சொந்தமான மூன்றரை ஏக்கர் இடம்பற்றி அந்த அரசு உயர்நிலைப் பள்ளி அதிகாரிகளிடத்தில் விவரம் கேட்டு அது அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அதற்கு அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த பாப்பாரப்பட்டியில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற நிலத்தை மருத்துவத் துறைக்கு மாற்ற ஆணை இன்னும் கிடைக்கவில்லை. ஆணை கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியதற்கு நன்றி. சுமார் 3 ஏக்கர் 8 சென்ட் இடம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சொந்தமானது. சுமார் 3 ஆண்டு காலமாக முயற்சி செய்தும் அது கல்வித் துறையில் இருக்கிறது. மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது என்று அந்த இடத்தை வாங்குவதற்கு அரசு முன் நின்று அதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். இன்னும் மருத்துவத் துறைக்கு அது மாற்றப்படவில்லை. மாற்றி அமைத்ததற்குப் பின்பு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் வட்டம் பாப்பாரப்பட்டியான அந்த நகரத்தைச் சுற்றி குறைந்தது 20, 25 மைல்களுக்கு எந்த விதமான மருத்துவமனையும் இல்லை. இப்போது இயங்கிக் கொண்டு இருக்கின்ற அந்த மருத்துவமனையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த இடத்தை 20, 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவு செய்து அந்த பகுதியில் உள்ள மக்களுக்கு நல்ல சுகாதாரம் கிடைக்க, மருத்துவ வசதி கிடைக்க ஏற்பாடு செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.